# திருமதி ராஜம் கிருஷ்ணன் படைப்புகள்

## கூட்டுக் குஞ்சுகள்

### 26

சுமதியை விஜி இப்போது கண்காணிப்பதுபோல் கூர்மையாகப் பார்க்கிறாள். எப்போதுமே சுமதிக்குத் தன்னை அலங்காரம் செய்துகொள்ளப் பிடிக்கும். கண்களுக்கு மை தீட்டிக் கொள்வதற்கே பல நிமிடங்கள் ஆகும். முடியைக் கத்தரித்துக் காதோரங்களில் வளைத்துக் கொண்டிருக்கிறாள். வேலம்மா என்ற தடை கழன்று விட்டபின் சுதந்தரம் அதிகமாகி விட்டாற்போன்று, சேலையும் இரவிக்கையும் மிகவும் இறங்கி இருக்கின்றன. ஞாயிறன்று காலையில் செந்தில் வருகிறான். வழக்கம்போல் அல்வா, சேவு, பழங்கள், பூ... எல்லாவற்றுடன் ஒரு பிளாஸ்டிக் பையையும் சுமதியிடம் கொடுக்கிறான்.

அதிலிருந்து இரண்டு நைலக்ஸ் சேலைகள்... பெரிய பூக்களுடன் விழுகின்றன.

“அம்மாவுக்கு எப்பிடி இருக்கு?...” என்று கேட்க வாயெடுக்கும் விஜி, சேலையைக் கேள்விக்குறியுடன் பார்க்கிறாள்.

ஆனால் சுமதியோ, அதற்குள் சேலையைத் தன்மீது வைத்துக்கொண்டு அழகு பார்க்கிறாள்.

“விஜி, உனக்குப் பச்சை எடுத்துக்க...!”

“அது சரி, இதெல்லாம் இப்ப எதுக்கு? எனக்கு நைலக்ஸ் சேலையே பிடிக்காதுன்னு தெரியாதா உனக்கு? சமய சந்தர்ப்பம் தெரியாம... வேலம்மா எப்படி இருக்கா?”

“தேவலாம் விஜிம்மா. அவங்கதான் இரண்டு சீலை வாங்கிட்டுப் போகணும்னு புடிவாதமாச் சொன்னாங்க...”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

“அவங்களுக்குச் செலவு இருக்கிறப்ப, இதெல்லாம் ஏன் அநாவசியமா இப்ப, சேலை வேணும்னா நாங்க வாங்கிக்கிறோம்? இதுபோல சமாசாரத்தில நீ ஏன் தலையிடுற?...”

விஜியின் கடுமை சுமதிக்குப் பிடிக்கவில்லை.

“வேலம்மா வாங்கிக் குடுத்தா உனக்கேன் கோபம் வருது? உனக்கு வேண்டாட்டிப் போ! நானே ரெண்டையும் வச்சுக்கறேன்...”

“வச்சுப்பே! அவளப் போயி ஒருதரம் பார்க்கணும்னு கூட உனக்குத் தோணல. இத்தினி சுயதலமா நீயிருப்பேன்னு ஃன் நினைக்கல!”

“ஆமா உனக்கு எப்பவும் இப்பிடி ஒரு கெட்ட குணம் இருக்கலாம். எனக்கு நல்ல சேலை உடுத்தணும், நல்லாயிருக்கணும்னு ஆசையிருக்கக்கூடாது, இல்ல?”

“அப்படி எப்போதும் ஆசைப்பட்டிருப்பது தப்புத்தான். உனக்குன்னு சில கடமைகள் இருக்கு. மற்றவர்களுக்கில்லாத சில வசதிகள், ‘ப்ரிவிலிஜஸ்’ உனக்கு இருக்கு. அதை ஒரு பொது நோக்குடன் பயன்படுத்தணும். படிக்க நேரமிருக்குதோ இல்லையோ, அலங்காரம் செய்து கொள்வதில் அதிகக் கவனம் எடுத்துக்கற. லீவு நாள்னா, சினிமாவுக்குப் போகாம இருக்கிறதில்ல. உன்னைப்போல் நான் ஸ்டூடன்டா இருக்கையில் எத்தனையோ விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் ஆர்வமும், லட்சிய தாகமும் எங்களுக்கெல்லாம் இருந்தது. இப்ப... கடனேன்னு படிக்கிறீங்க. உன் கிரேட்... அப்பா சொன்னார். வெட்கமாயிருக்கு!” சுமதியின் கருவலான முகம் ஓர் கணம் இறுகுகிறது. பிறகு பாய்கிறாள்.

“நிறுத்து, உன் கடமைய முதல்ல நீ கவனிச்சுச் செய்யி. பிறத்தியாருக்குப் பிறகு உபதேசம் பண்ணலாம்! உன்னைப் பத்தி ஊரே சிரிக்கிறது. அப்பா தலை குனிஞ்சி போறது உன்னால் தான். வேலம்மாவுக்கும் அதுதான் சீக்கு!”



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

மருமத்தில் பார்த்து அடிக்கும் இந்தத் தாக்குதல் விஜிக்கு அதிர்ச்சியூட்டுவதாக இருக்கிறது. கண்கள் ஊற்றுப்பறித்து விடுகின்றன. விழுங்கிக் கொள்கிறாள்.

“இதபார் சுமி, உனக்குச் சரியாய்த் தெரியாத விஷயத்தில் நீ தலையிடாதே. ஆனால் நான் உன்னைவிடப் பெரியவள்; அநுபவமும் உள்ளவள். உன்னைப் போன்ற இளம்பெண்கள், இன்று சமுதாயத்தில் பெண்கள் நிலையை அவலமாக்கும் கேடுகளைப் பற்றிச் சிந்தித்துப் போராடத் தயார் செய்து கொள்ளவேண்டும். நீ சேலையையும் ரவிக்கையையும் கீழே இறக்கி, ஊரைப் புரட்டுகிறாய். இப்படி உடுத்துக் கொண்டு தெருவில் காட்சிப் பொம்மைகள் போல் போனால் - ‘ஈவ்டீஸர்ஸ்’ என்ற வருக்கம் ஊக்கமாக வளராதா? இதெல்லாம் சின்ன விஷயமல்ல சுமி!”

“இதபார், இது என் சொந்தவிஷயம். இதிலெல்லாம் தலையிட உனக்கு ஒரு உரிமையும் இல்லை!” என்று சல் சல்லென்று கொலுசு ஓசையிட அவள் அப்பால் செல்கிறாள்.

இந்த உரையாடலைக் கேட்டும் கேட்காமலும் எதோ புத்தகத்தைப் புரட்டுவதுபோல் செந்தில் பாவனை செய்கிறான்.

விஜி சமையலறையில் சென்று காபி கலக்கிறாள்.

செந்திலிடம் பழைய கவடில்லாச் சந்தோசம் சுவடு தெரியாமல் போய்விட்டது.

“காபி குடிக்கிறாயா செந்தில்?”

“நீங்க எதுக்கு விஜிம்மா சிரமப்படணும்? நான் காபி குடிச்சிட்டுத்தான் வாரேன். அப்பா எங்கே?”

“அவர் காலையில் சின்னப்பட்டிக்குப் போவதாகச் சொன்னார். சுமி விவரமே தெரியாத பிள்ளையாக இருக்கிறா. உன் அம்மா இவ்வளவு செல்லம் கொடுத்திருக்கக்கூடாது!.. நேத்து சாயங்காலம் இந்த மழை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

நசநசப்பில் யாரோ சிநேகிதிகளுடன் சினிமாவுக்குப் போய் வந்திருக்கிறாள். சொன்னால் கோபம் வருது…"

அவன் மறுமொழியின்றி எங்கோ பார்க்கிறான்.

"அப்ப வரேன் விஜிம்மா. லாரி திருவனந்தபுரம் பக்கம் போகுது. நான் அம்மாவைப் பாத்துட்டு எதுனாலும் சொல்லணுமா?"

"எனக்கு வந்து பார்க்கணுமின்னிருக்கு. ஐயாம்மாக்கும் ஊருல உடம்பு நல்லாயில்ல. இந்த வருசம் இவ படிப்பு முடியுமட்டும் இங்கதானிருக்கணும்."

அவன் முள்ளின் மேலிருப்பதுபோல் தவித்துவிட்டு விடைபெற்றுச் செல்கிறான். சுமதி வாயிற்படியில் நின்று அவனிடம் பேசுவதாகத் தெரிகிறது.

சந்தேகங்கள் சிந்தையை வளைக்கின்றன.

மறுநாள் காலை அவள் காய்கறி வாங்கச் செல்கையில் கோயில்முன் லோசனியைப் பார்த்து விடுகிறாள்.

"விஜி எப்ப வந்தே? வேலம்மாவுக்கு உடம்பு சுகமில்லேன்னாங்க. இப்ப எப்பிடி இருக்கா?"

"நா வந்து பத்து நாளாகப் போவுது. வேலம்மாளை ஆசுபத்திரிக்கு நாகர் கோயிலுக்குக் கொண்டு போயிருக்கா."

"ஐயோ? எனக்குத் தெரியாதே? ஆரு. செந்தில் கொண்டிட்டுப் போயிருக்கிறானா?…"

"ஆமாம். நீ எத்தினி நாளா இங்கவிட்டுப் போயிட்ட; இப்ப பேச்சுத் துணைக்குக்கூட யாருமில்ல லோசனி!…"

"சுமி எப்படி இருக்கு? காலேஜுக்குப் போவுதா?"

"போறா, ஒண்ணுமே தெரியாத விளையாட்டுப் பிள்ளையாகவே இருக்கிறா. வேலம்மா எப்பிடி இருக்கான்னு கூட நாந்தான் கேட்கிறேன்…"



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

லோசனி எதையோ சொல்லத் துடிப்பவளாக... ஆனால் மௌனமாக எங்கோ பார்க்கிறாள்.

“ஏ, என்ன விசயம் லோசனி?”

“சுமி விசயம் உனக்குத் தெரியும்ல?”

“என்ன விசயம்?”

“அவ, செந்திலோடு ரெண்டு நா எங்கேயோ போயிட்டா. வேலம்மாவுக்குச் சொல்லவும் முடியல. மெல்லவும் முடியல. வீட்டில லகள. உங்கப்பா அதுங்கூடப் பேசுறதேயில்ல. வேலம்மாக்கு அதான் சீக்குன்னுகூடச் சொல்லுவே. அப்பவே ரத்தமாகத் துப்பிட்டிருந்தா...” இடி விழுந்தாற் போலிருக்கிறது.

“செந்தில் இங்க வந்தா ராத்தங்க மாட்டா. வாரதே இல்ல. இந்த சுமிதா... நீ எப்படி இருக்கிற, விஜி! உன் கால் தூசுக்கு வராது அது. வேலம்மா சொல்லி அழுதா... ஐயோ லோசனி, நா வளத்த புள்ள நானே இதுக்கு உடந்தைன்னு ஊரு முச்சூடும் சொல்லுவாங்களேடீன்னு அப்படியே உருகிப் போயிட்டா. வெளியாளுக்குத் தெரிஞ்சா குல்லுனு போயிடுமே?' இட்டிலிக்கார ஆச்சி கேட்டப்ப, பாட்டி வீட்டுக்குப் போயிருக்கான்னு சொன்னா. செந்தில் அம்மாகிட்ட வந்து அழுவாக்குறயா, ‘நான் என்னப் பண்ணுவேம்மா. நீ என்னக் கட்டிக்கிலேன்னா உயிரே விட்டுடுவேன்னு தொந்தரவாப் பண்ணிச்சி. அப்பிடியும் எனக்கு பயமாயி, குத்தாலத்து கோயிலில மால போட்டுக் கிட்டோம்’னு சொன்னானாம். உங்கையா உங்கிட்ட எதும் சொல்லலியா?”

விஜிக்குப் பளிச்சென்ற தோற்றங்கள் இருளுள் புதைவது போல் தோன்றுகிறது. மழை சரசரவென்று பிடித்துக் கொள்கிறது.

“இத்தினி வருசமா இருந்த எடத்தைவிட்டுப் போனது நல்லாவேயில்லை விஜி. மழ பிடிச்சிட்டது. நீ போம்மா...”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

விஜி குடை வைத்திருக்கிறாள். அவள் நனைந்து கொண்டு விரைகிறாள். விஜிக்கு அன்று வேலை செய்யப் பொருந்தவில்லை.

ஐயாம்மாவுக்கு இந்தச் சங்கதி தெரியுமோ?

தெரிந்தால் உயிரை விட்டுவிடுவாள்!

செந்தில் பத்தாவது முடிக்கவே திணறினான். தேறினானோ இல்லையோ, தெரியாது. ஆனால், இவள் கல்லூரியில் இறுதியாண்டு படிக்கிறாள்.

படிப்புக்கும் இதுபோன்ற வேட்கைகளுக்கும் சம்பந்தமில்லை என்று தோன்றுகிறது. படித்துச் சிந்திக்கத் தெரிந்த அவளே வேட்கையின் மாயத்தில் ஒரு நல்ல வாழ்க்கைத் துணைவனைத் தேர்ந்து கொள்வதில் ஏமாந்து போனாள்.

செந்தில் உண்மையில் எத்தகையவனென்று எப்படித் தெரியும்? ஆனால் அவளுக்குத் தெரிந்து அவன் பண்பாளன் தான். அவன் அவனுடைய நிலையில் உள்ளவர்களைப் போல் எப்போதேனும் பீடி குடித்துக் கொண்டோ, கீழ்த்தரமான பேச்சுக்களைப் பேசியோ அவள் கண்டதில்லை. சாராயம், சூது, பெண்கள் தொடர்பு என்று இருந்தால் கையில் பொருள் தங்காது. அம்மாவைப் பார்த்துவிட்டுச் செல்லாமலிருக்க மாட்டான். அவனால் தனிக் கார் வைத்து நோயுற்ற தாயைக் கூட்டிச் செல்ல முடிகிறது. ஒரு சொல் அதிர்ந்து பேசியதில்லை. அப்பாவிடம் மிகுந்த மரியாதை காட்டுகிறான். ஆனால் வெளித்தோற்றம் கண்டு எதுவும் சொல்வதற்கில்லை.

சுமி பகல் சாப்பாட்டுக்கு வருவதில்லை. ஆனால், மாலையில் ஆறு மணியாகியும் ஏன் வரவில்லை?

மழைகால இருள் பரவி இருக்கிறது.

அவள் வாயிற்படியில் வந்து நின்று தெருவைப் பார்க்கிறாள். அப்பா வருகிறார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

“ஏம்மா, விளக்கப்போடக்கூடாது?”

“சுமி இன்னும் வரலியே?”

“சுமி செந்திலுடன் வேலம்மாவைப் பாக்கப் போயிருக்கா.”

“ஓ, என்னிடம் சொல்லக்கூடாதா, அதை?”

அவர் இரு கைகளையும் நிலைப்படியில் வைத்துக் கொண்டு விளக்கொளியில் சித்திரம்போல் நிற்கும் அவளையே பார்க்கிறார்.

“உனக்குச் செய்தி தெரிஞ்சிருக்காது விஜி. அவங்க... அவங்க கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. எப்படியோ சந்தோஷமாக இருந்தால் சரி. செந்தில் நல்ல பையன் தான். ஆனால் வேலம்மாவுக்கு இது சீரணிக்கக் கூடியதாக இல்லை. ஏன்னா, ஊரு உலகக் கணிப்பை நினைச்சே அவள் தன் விரும்பம்னு ஒண்ணுமில்லாதவளாக ஆயிட்டா. எங்கிட்ட இது நாள் நிமுந்து பேசினதில்ல. அன்னிக்கு ரொம்ப வருத்தப்பட்டு அழுதிட்டா. இதுல என்ன தப்பு வந்திடிச்சி, நீங்க எதுக்கு இப்பிடி வருத்தப் படணும்னா கேட்டாத்தானே? ஐயோ, அது பெரிய எடத்தில போக வேண்டிய பொண்ணு. அதுக்குச் சமமான படிப்புக்கூட இல்லாதவனக் கட்டிக்கலாமான்னு அத்தயே சொல்லிட்டிருந்தா. சுமி கூட மனப்பண்பு கொண்டு எந்த வேலை செய்தால் என்னன்னு காதலிச்சாளான்னு தெரியல. இது நிலைச்சு நிக்கணும். நாளைக்கு நம் புருசன் லாரி ஓட்டுறவனான்னு நினைச்சி முரண்டு பண்ணக்கூடாது. நா ஒண்ணு மட்டும் சொன்னேன். படிச்சி முடிஞ்சு ஒரு நிலை வரும் வரையிலும் நீங்க தனிக்குடும்பம்னு வைக்க வேண்டாம்னு சொன்னேன். படிப்பு முக்கியம்...”

விஜி எந்தப் பதிலும் கூறவில்லை.

மழை அடைத்துக் கொட்டுகிறது. தொழில்கள் முடங்குமளவுக்குப் பெய்து, ஊரின் சாக்கடைகளை நிரப்புகிறது. கை வண்டிகளில் தாள், குச்சி அட்டைப் பெட்டிகள் இழுத்துச் செல்லும் கூலிக்காரர் முடங்க



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

வேண்டியிருக்கிறது. “என்னா எளவு, இந்த ஊருல இப்பிடி மள கொட்டித் தொலக்கிது” என்று வசை பாடிக்கொண்டு முத்தாச்சி இட்டிலி கொடுத்து விட்டுச் செல்கிறாள்.

தீபாவளி கொண்டாட ஊரெல்லாம் களிப்புடன் கண் மலரும் நேரத்தில், செந்தில் வந்து, முன்னிரவில் வேலம்மாளின் ஆவி பிரிந்துவிட்டதைத் தெரிவிக்கிறான்.

*****



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com